# இன்பவாசகம்

3

2/3-56

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1956

TB
031(3)
N56.
147012.

# இன்ப வாசகம்

## மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR ...
2? JUL 1958
... RAS

Editor :
எஸ். தேவஇரக்கம், எம். ஏ., எல். டி.,
Director, Publication Dept.
( Diocesan Book Depot, Palamcottah )

வெளியிடுவோர் :
திருநெல்வேலி டயோசீஸன் புக் டெப்போ,
பாளையங்கோட்டை.

பதிப்புரிமை]

1956

[விலை 0

First Edition 1950
Reprinted 1951
Reprinted 1952
Reprinted 1954
Reprinted 1955
Reprinted 1956

147012
TB
031 (3)
N56

*Approved by the Madras Text Book Committee for Class use in Elementary and Secondary Schools Vide Fort St. George Gazette Pages 41 and 116 dated 19—5—'54.*

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — K. 414.

# முன்னுரை

---

கைத்தொழில் வல்லார் தமது முதிர்ந்த அறிவையும், அநுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு தத்தம் தொழிலை எளிதிலும், விரைவிலும் நடத்தப் பல புதிய முறைகளைக் கண்டுபிடிக்கின்றனர். பின்னர், அம்முறைகளை மேற்கொண்டு பயனடைகின்றனர். அவ்வாறே, கல்வித் துறையிலும் அநுபவமும், அறிவும் முதிர்ந்த அறிஞர் பலரது முயற்சியால் பழைய முறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் இருவென இருந்து, அவர் சொல்லென, நெடுங்கணக்கை வரிசைப்படி ஒப்புவிக்கும் முறை நம் நாட்டில் நெடுநாளாக உலவிய பழைய முறை. கல்வி முறையில் மனோதத்துவ நிபுணரின் புத்தப் புதிய ஆராய்ச்சிகள் புகுந்து பழைய முறையில் பல மாறுதல்களை உண்டாக்கிவிட்டன. அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தைப் படிப்பவருக்கு இவ்வுண்மை எளிதில் புலனாகும்.

இப்புத்தக வரிசை, புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவருக்கு விருந்தாகவும் ஆசிரியருக்கு உதவியாகவும் அமைந்துள்ளது.

ஆசிரியர்.

# பொருளடக்கம்

147012


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பயிர்த்தொழில் | ... | 1 |
| 2. | ஔவைப் பாட்டி | .... | 3 |
| 3. | நெற்பானையும் எலியும் (பாட்டு) | .... | 5 |
| 4. | தெனாலி இராமனும் திருடரும் | ... | 6 |
| 5. | ஓடி விளையாடு பாப்பா (பாட்டு) | ... | 8 |
| 6. | கனா | .... | 9 |
| 7. | அறிவுள்ள நாய் | .... | 11 |
| 8. | தேன் | ... | 12 |
| 9. | தேகப் பயிற்சி (பாட்டு) | .... | 15 |
| 10. | தென்னை | .... | 16 |
| 11. | வண்ணாத்திப்பூச்சி | .... | 17 |
| 12. | இ[illegible]ளையும் மரகதவல்லியும் | .... | 20 |
| 13. | தக்கிளி அல்லது கைக்கதிர் | ... | 22 |
| 14. | பனைமரம் (பாட்டு) | .... | 24 |
| 15. | கடிதம் எழுதும் முறை—I | .... | 25 |
| 16. | கடிதம் எழுதும் முறை—II | .... | 27 |
| 17. | பத்திரிகைச் செய்தி | .... | 30 |
| 18. | கோதுமைத் தோசை (உரையாடல்) | ... | 31 |
| 19. | ஆகாய விமானம் (பாட்டு) | .... | 34 |
| 20. | விளையாட்டு | .... | 35 |
| 21. | நரியும் ஒட்டகமும் | .... | 36 |
| 22. | ஔரங்கசீபு | .... | 39 |
| 23. | காந்தி அடிகள் | .... | 42 |
| 24. | காந்தி மகான் வாழ்த்து (பாட்டு) | .... | 45 |
| 25. | வள்ளல் பாரி | .... | 46 |
| 26. | இரண்டு நண்பர்கள் (நாடகம்) | .... | 48 |
| 27. | முனிவரும் மானும் | .... | 52 |
| 28. | அறநெறிகள் | .... | 53 |
| | செய்யுட் பகுதி | .... | 54 |
| | i. கொன்றை வேந்தன் | | |
| | ii. வெற்றி வேற்கை | | |
| | iii. செந்தமிழ் நாடு. | | |

# 1. பயிர்த் தொழில்



நமது நாட்டில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. அவைகளில் பயிர்த் தொழிலும் ஒன்றாகும். நிலத்தைப் பண்படுத்தி அதில் உணவுப் பொருள்களை விளையச் செய்வதே பயிர்த்தொழிலாகும். இதை 'விவசாயம்' எனவும், 'உழவுத் தொழில்' எனவும் கூறுவதுண்டு. பயிர்த் தொழில் செய்கிறவர்களை 'உழவர்கள்' என்கிறோம்.

நாம் உணவின்றி வாழ முடியாது. நமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் பெரும்பாலும் பயிர்த் தொழிலின் மூலமாகவே கிடைக்கின்றன. ஆகையால் மற்றத் தொழில்கள் எல்லாவற்றிலும் அது முக்கியமானதாகும்.

பயிரிடும் நிலம், நன்செய், புன்செய் என இரு வகைப்படும். புன்செய் நிலத்திற்கு நீர் பாய்ச்சுவது இல்லை; மழை நீரின் உதவியால் அந்நிலங்களில் பயிரிடுகின்றனர். ஆறு, ஏரி, குளம் முதலிய நீர் நிலைகளிலிருந்து நீர்பாய்ச்சி நன்செய் நிலங்களைப் பயிரிடுகின்றனர். பயிரிடுதலைச் 'சாகுபடி செய்தல்' எனக் கூறுவதும் உண்டு.

தினை, சாமை, எள், துவரை, மொச்சை, பயறு முதலிய தானியங்கள் புன்செய் நிலங்களில் விளைகின்றன. நெல், கரும்பு, வாழை முதலியன நன்செய் நிலங்களில் பயிரிடப்படுகின்றன.

**கேள்விகள்**

1. பயிர்த் தொழிலின் வேறு பெயர்கள் யாவை?
2. பயிர்த் தொழில் செய்பவர் யாவர்?
3. மற்றத் தொழில்களைவிடப் பயிர்த் தொழில் ஏன் முக்கியமானது?
4. பயிரிடும் நிலங்கள் எத்தனை வகைப்படும்?
5. புன்செய்ப் பயிர்களில் ஐந்தின் பெயரைக் கூறு
6. நன்செய்ப் பயிர்கள் யாவை?

**இலக்கணம்: பெயர்ச் சொல்**

1. உன் பெயர் என்ன? (தனசிங்........)
2. இரண்டு தானியங்களின் பெயர்களைக்கூறு. (தினை, சாமை).
3. நீர் நிலைகள் மூன்றின் பெயர்களைக்கூறு. (ஆறு, ஏரி, குளம்).
4. நன்செய்ப் பயிர்கள் இரண்டின் பெயர்களைக்கூறு. (நெல், கரும்பு) தனசிங், தினை, சாமை, ஆறு, ஏரி, குளம், நெல், கரும்பு இவைகள் எல்லாம் **பெயர்ச் சொற்கள்.**

## 2. ஔவைப் பாட்டி



முன் ஒரு காலத்தில் நம் தமிழ் நாட்டில் ஔவையார் என்ற பெண் புலவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியில் சிறந்தவர். வயதில் முதிர்ந்தவர். ஆதலால் எல்லோரும் அவரை மிக்க மரியாதையுடன் ஔவையார் என்று அழைத்தனர். அவர் ஏழைகளிடத்தில் மிகவும் அன்பு உடையவர். தனக்கு ஒரு சிறிய உபகாரம் செய்தவர்களிடம்கூட நன்றி பாராட்டி அவர்கள் மேல் அழகிய பாடல்களைப் பாடினர்.

ஒரு சமயம் அவர் கால் நடையாக ஓர் ஊருக்குச் சென்று கொண்டு இருந்தார். அப்பொழுது அவருக்குப் பசி அதிகமாக இருந்தது. வழியில் வேலைசெய்துகொண்டு இருந்த ஒரு குடியானவன் தான் குடிக்க வைத்திருந்த கூழைப் பாட்டிக்குக் கொடுத்தான். அவன் செய்த உபகாரத்திற்காக அவன் மேல் ஔவையார் ஒரு கவி பாடினர்.

சிறுவர்கள் நல்ல குணமும், ஒழுக்கமும், கல்வியும் உடையவர்களாய் வாழவேண்டும் என்பது ஔவைப் பாட்டியின் விருப்பம். ஆகையால் சிறுவர்களுக்கேற்ற பாட்டுக்களும் பல பாடி இருக்கிறார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம் என்னும் நூல்கள் அவர் பாடியவை.

ஔவைப் பாட்டி இறந்து போனார். அவர் பாட்டுக்களை நாம் படிக்கிறோம். நமக்கு அவை பயன்படுகின்றன. ஆகையால் நாம் அவரை மறக்கக்கூடாது. அவர் கூறியபடி நடக்க வேண்டும்.

**கேள்விகள்:**

1. ஔவையாரை ஏன் அனைவரும் மதித்தனர்?
2. ஔவையார் பாடிய சில நூல்களைக் கூறு.

**இலக்கணம்:**

கீழே கொடுத்திருக்கும் பெயர்களைப் பொருத்தமான இடத்தில் அமைத்து வாசி.

பாட்டுக்கள், கவி, நல்வழி, கூழ்.

1. ஔவையார் பாடிய நூல்களில் ஒன்று—
2. ஔவையார் குடித்தது—
3. ஔவையார் சிறுவருக்கேற்ற—பல பாடியிருக்கிறார்.
4. ஔவையார் குடியானவனைப் புகழ்ந்து ஒரு—பாடினார்.

# 3. நெற்பானையும் எலியும்



பாட்டியின் வீட்டுப் பழம்பானை — அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும் — அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா.

உள்ளே புகுந்துநெல் தின்றுதின்று — வயிறு
ஊதிப் புடைத்துப் பருத்ததடா
மெள்ள வெளியில் வருவதற்கும் — ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா.

பானையைக் காலை திறந்தவுடன் — அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்தவொரு
பூனை எலியினைக் கண்டதடா — ஓடிப்
போய் அதைக் கௌவியே சென்றதடா.

கள்ள வழியினில் செல்பவரை — எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ள படியே நடப்பவர்க்குத் — தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா.

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

# 4. தெனலி இராமனும் திருடரும்

(மௌனமாய் வாசித்துக் கதையைச் சொல்)

தெனலி என்ற ஊரில் இராமன் என்ற ஒருவன் இருந்தான். அவன் விசயநகர அரசனது அரண்மனை விகடனாக இருந்தான். ஒரு நாள் இரவு அவனுடைய வீட்டுக் கொல்லையில் சில திருடர்கள் பேசிக் கொண்டிருந்ததை அவன் கேட்டான். தன் வீட்டில் திருடவரும் அவர்களை ஏமாற்றிவிட எண்ணினன். ஆதலால், அவன் தன் மனைவியிடம், "நம் பணத்தை வீட்டில் வைத்திருப்பது சரியன்று. எங்கும் திருடர் பயம் அதிகமாக இருக்கிறது. நம்மிடம் இருக்கும் பணத்தை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டி நம் வீட்டுக் கொல்லைக் கிணற்றில் போட்டு விட்டால் பத்திரமாக இருக்கும்" என்று திருடர்கள் காதில் விழும்படி உரக்கக் கூறினன். அவன் மனைவியும், "ஆம், ஆம். அதுவே நல்ல யோசனை" என்று உரத்த குரலில் கூறினள். இதைக் கேட்ட கள்வர் மகிழ்ந்தனர்.

தெனலி இராமன் ஒரு பெட்டிக்குள் செங்கல் துண்டுகளை அடுக்கிப் பெட்டியைப் பூட்டிக் கிணற்றினுள் போட்டுவிட்டான். கிணற்றிலிருந்து அப் பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விட வேண்டும் என்று கள்வர் திட்டமிட்டனர்.

கிணற்றில் இருந்த ஏற்றத்தை உபயோகித்துக் கள்வர் இரவெல்லாம் கிணற்று நீரை இறைத்தனர். தெனலி இராமன் மறைவாகச் சென்று

அவர்கள் இறைத்த நீரைத் தன் மரங்களுக்கெல்லாம் பாய்ச்சினன். எல்லா மரங்களுக்கும் நீர் பாய்ச்சி முடியும்பொழுது நேரமும் விடியற்காலம் ஆகிவிட்டது. எனவே தெனலி இராமன் கிணற்றின் அருகில் சென்று, "நண்பர்களே! பொழுது விடியும் நேரம் ஆகிவிட்டது. எல்லா மரங்களுக்கும் நீர் பாய்ச்சிவிட்டேன். உங்களுக்கு மிக்க நன்றி," என்ருன். திருடர்கள் வெட்கத்துடன் ஓடி விட்டனர்.

**பயிற்சி :**

நீங்கள் வாசித்த கதையில் உள்ள ஒரு சம்பவம் படமாகக் கீழே காட்டப்பட்டிருக்கிறது. படத்தைப் பார்த்து, அச்சம்பவம் என்ன என்று சொல்லுங்கள்.



# 5. ஓடி விளையாடு பாப்பா



**1**

ஓடி விளையாடு பாப்பா — நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா — ஒரு
குழந்தையை வையாதே
பாப்பா.

**2**

சின்னஞ் சிறுகுருவி போல — நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக்
கண்டு — நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு
பாப்பா.

**3**

கொத்தித் திரியும் அந்தக்
கோழி — அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக்
காக்கை — அதற்கு
இரக்கப் படவேண்டும்
பாப்பா

— பாரதியார்.

# 6. கண்



நம்முடைய உடலில் உள்ள உறுப்புக்களில் கண் மிகவும் முக்கியமானது. கண் கெட்டுப் போனால் நாம் ஒன்றையும் பார்க்க முடியாது. ஆகையால் கண்களைக் கவனமாய்ப் பாதுகாக்க வேண்டும்.

கடவுள் கண்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கிறார். எலும்புகளாலான குழிகளுக் குள் அவை அமைந்திருக்கின்றன. தும்பு, தூசு முதலியன கண்களில் விழாதபடி இமைகள் மூடிக் காவல் செய்கின்றன. சில சமயங்களில், இமை களின் காவலைத் தப்பிச் சிறு தூசுகள் கண்களில் விழுந்து விடுகின்றன. அப்பொழுது அவற்றை வெளிப்படுத்துவதற்காகக் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வெளிப்படுகிறது.

சிலர் கண்களைக் கவனிப்பதே இல்லை. இது தவறு. குறைந்த வெளிச்சத்திலோ அல்லது அதிக வெளிச்சத்திலோ படித்தல் கண்ணுக்குக் கெடுதியை உண்டாக்கும். பிரயாணம் பண்ணும் பொழுது படிப்பதும் தவறு. படிக்கும்பொழுதும், எழுதும்பொழுதும் ஒளி இடது பக்கத்திலிருந்து வருதல் வேண்டும்.

சில சமயங்களில் கண்களுக்கு நோய் ஏற்படுவது உண்டு. கண் வலி எளிதில் பரவும் தன்மையுள்ளது. கண் வலி ஏற்பட்டிருக்கும் சமயத்தில் நம் கைகளால் கண்ணைக் கசக்குதல் கேட்டை விளைக்கும். உடனே கண் வைத்தியரிடஞ் சென்று சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். கண்களில் நோய் உள்ள பிள்ளைகளுடன் நெருங்கிப் பழகக் கூடாது.

**கேள்விகள் :**

1. இமைகளின் வேலை யாது?

2. கண்ணீர் வெளிப்படுவது ஏன்?

3. நாம் படிக்கும்பொழுது கவனிக்க வேண்டியது யாது?

**இலக்கணம் :**

1. சில பிள்ளைகளின் பெயர்களைக் கூறு.

2. இரண்டு நாட்களின் பெயர்களைக் கூறு.

3. மூன்று விளையாட்டுகளின் பெயர்களைக் கூறு

"பொருளுக்கோ, செயலுக்கோ பெயராய் வருவது **பெயர்ச்சொல்**."

# 7. அறிவுள்ள நாய்

(படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்)



# 8. தேன்

தேன் மிகவும் சுவையாக இருக்கும். இதை உணவாகவும், சில சமயங்களில் மருந்தாகவும் உட்கொள்கிறோம்.

மரக் கிளைகளிலும், மரப் பொந்துகளிலும், தேன் கூடுகளை நாம் காணலாம். மரக் கிளைகளில்



காணப்படும் தேன் கூடுகளை விட, மரப்பொந்துகளில் காணப்படும் தேன் கூடுகளிலே அதிகத் தேன் கிடைக்கும். தேன் கூட்டைத் 'தேன் அடை' என்று கூறுவார்கள். தேனடைகளில் எண்ணிறந்த சிறு அறைகள் இருக்கின்றன. சில அறைகளில் மட்டும் தேன் இருக்கும். தேன் இருக்கும் அறைகள் தேனடையின் மேற்பகுதியிலேயே அமைந்திருக்கும். தேன் இல்லாத மற்ற அறைகளில் தேன் புழுக்கள் வசிக்கின்றன. இப் புழுக்களே தேனீக்களாக ஆகின்றன.



தேன் கூடுகளில் காணப்படும் ஈக்கள் மூவகைப்படும். அவை இராணி ஈ, ஆண் ஈ, வேலைக்கார ஈ என்று சொல்லப்பெறும். இராணி ஈயே மற்ற ஈக்களைவிடப் பெரிதாக இருக்கும். அதுவே மற்ற ஈக்களுக்கெல்லாம் தாய். அதன் விருப்பப்படியே மற்ற ஈக்களெல்லாம் நடக்கும்.

ஒரு கூட்டில் ஓர் இராணி ஈதான் உண்டு. ஆனால் ஆண் ஈக்கள் பல உண்டு. இவற்றைவிட வேலைக்கார ஈக்களே மிகுதியாக இருக்கும். இவற்றை அலி ஈக்கள் எனக் கூறுவதும் உண்டு. தேன் சேர்ப்பதும், தேனடையைக் காவல் புரிவதும், தேன் புழுக்களுக்கு உணவளிப்பதும் இந்த வேலைக்கார ஈக்களின் வேலையாகும்.



இக்காலத்தில் சிறு வீடுபோன்ற தேன் கூடுகளை, மரப் பலகைகளால் அமைத்து அதில் தேன் ஈக்களை வளர்க்கிறார்கள். தேன்சேகரிக்கவும், புழுக்கள் வாழவும் தனித்தனி அறைகள் உண்டு. மாதத்திற்கு ஒரு முறை இதிலிருந்து தேன் எடுக்கின்றனர்.



தேன் எடுப்பதற்கு அவர்கள் கையாளும் முறை மிகவும் சிறந்தது. காட்டில் தேன் எடுக்கிறவர்கள் தேனுடன் மெழுகையும் சேர்த்து எடுக்கின்றனர். வீடுகளில் தேனீ வளர்ப்பவர்கள் நவீன முறையில் அமைந்த தேன் எடுக்கும் கருவி ஒன்றை உபயோகித்துத் தேனை மட்டும் இலகுவில் பிரித்து எடுக்கிறார்கள். இம் முறையினால்

ஈக்களுக்கு மெழுகு சேர்க்கும் வேலை குறைகிறது. ஆகையால் விரைவில் அவை நிரம்பத் தேன் சேர்த்து விடுகின்றன.

தேனீ வளர்த்தல் ஓர் இலாபகரமான வேலை.

**கேள்விகள் :**

1. தேன் எவ்வாறு உபயோகப்படுகிறது?
2. 'தேன் அடை' என்றால் என்ன?
3. மூன்று வகைத் தேன் ஈக்கள் யாவை?
4. அலி ஈக்கள் செய்யும் வேலை யாது?
5. தேன் எடுக்கும் நவீன முறையினால் உண்டாகும் நன்மை யாது?

**இலக்கணம் :**

கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களைத் தனியே எடுத்து எழுது.

1. தேன் கிடைக்கும்.
2. அறைகள் இருக்கின்றன.
3. புழுக்கள் வசிக்கின்றன.
4. ஈக்களை வளர்க்கிறார்கள்.

# 9. தேகப் பயிற்சி





தேகப் பயிற்சி செய்வோம்—வரிசையாய்ச்
சேர்ந்து நிமிர்ந்து நிற்போம்.
வேகமாய்க் கால் வீசி—நடப்போம்
வேங்கை போற் பாய்ந் திடுவோம்.

சோம்பலை வெட்டி எறி—இடுப்பைத்
தோகை மயில் போல் வளை
கையை மடக்கிடுவோம்—முன்னும் பின்னுங்
கையைச் சுழற்றிடுவோம்.

பைய வுட் கார்ந் தெழுவோம்-பஸ்கிசெய்து
பாதத் தசை வளர்ப்போம்
சேர்த்துக் கரங்களெல்லாம்—வட்டமாய்ச்
சேர்ந்து நட மிடுவோம்.

— சுவாமி சுத்தானந்த பாரதியார்.

# 10. தென்னை

(படத்தைப் பார்த்து நடப்பதைச் சொல்)



# 11. வண்ணத்திப் பூச்சி

இது ஒரு வண்ணத்திப் பூச்சியின் படம். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் காடெங்கும் வண்ணத்திப் பூச்சிகளைக் காணலாம். அதன் சிறகுகளில் அழகான வர்ணங்கள் காணப்படுகின்றன. அதன் தலையில் இரண்டு கொம்புகள் போல் காணப்படும் உறுப்புக்களே அதன் உணர்ச்சிக் கருவிகளாகும்.



வண்ணத்திப் பூச்சி இலைகளின் அடியில் முட்டை இடுகிறது. சூரிய வெப்பத்தால் முட்டைகள் வெடிக்கின்றன. அவற்றிலிருந்து புழுக்கள் வெளி வருகின்றன. வண்ணத்திப் புழுக்களுக்கு இலைகளே சிறந்த ஆகாரம். இலைகளைத் தின்று சில தினங்களில் அவை பெரிய புழுக்களாகி விடுகின்றன. இரை தின்னத் தின்ன அவற்றின் உடல் பருத்துக்கொண்டே வரும்.



நன்ருகத் தடித்த புழுக்கள் ஒரு கொம்பின் நுனியிலோ, அல்லது இலையின் அடிப்பாகத்திலோ தங்கள் உடலையே ஒரு கூடாக

அமைக்கின்றன. அப்பொழுது அவற்றைப் பார்ப்பவர்களுக்குச் சிறு முட்டைகள் தொங்கிக் கொண்டிருப்பன போல் தோன்றும்.





சில நாட்களில் கூடு வெடித்து விடுகிறது. அதிலிருந்து வண்ணாத்திப் பூச்சி வெளி வருகிறது. ஆகாயத்தில் வண்ணாத்திப் பூச்சிகள் பறந்து திரிகின்றன. பூக்களில் உட்கார்ந்து தேனை உறிஞ்சிக் குடிக்கின்றன.



**கேள்விகள் :**

1. வண்ணாத்திப் பூச்சிகள் எந்த எந்த மாதங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன?
2. வண்ணாத்திப் பூச்சியின் உணர்ச்சிக் கருவிகள் எங்கே இருக்கின்றன?
3. வண்ணாத்திப் பூச்சிகள் எங்கே முட்டை இடுகின்றன?
4. வண்ணாத்திப் பூச்சியின் உணவு என்ன? அதை எவ்வாறு உண்கிறது?

**இலக்கணம் :**

கீழ்வரும் இரண்டு வரிசைகளிலுமுள்ள சொற்களைப் படி.

| | |
|---|---|
| வண்ணாத்திப் பூச்சி | — வண்ணாத்திப் பூச்சிகள். |
| புழு | — புழுக்கள். |
| முட்டை | — முட்டைகள். |
| நாள் | — நாட்கள். |
| பூ | — பூக்கள். |
| இலை | — இலைகள் |

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது ஒருமைப் பெயர்ச் சொல்; பல பொருள்களின் பெயரைக் குறிப்பது **பன்மைப் பெயர்ச் சொல்.**

**இவை ஒருமை எண், பன்மை எண்** என்றும் கூறப்படும்.

## 12. கீரிப் பிள்ளையும் மரகதவல்லியும்

(மௌனமாகப் படித்துக் கதையைச் சொல்)

திருக்குறுங்குடிக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் மரகதவல்லி என்று ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு வெகு காலமாகக் குழந்தை இல்லை. அக் கவலையைப் போக்குவதற்காக அவள் ஒரு கீரிப் பிள்ளையை அருமையாக வளர்த்து வந்தாள். அக்கீரிப் பிள்ளை வீட்டிற்கு வந்த ஒரு வருஷத்திற்குள் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆதலால், அவள் தன் குழந்தையைப் போலவே கீரியையும் அன்புடன் வளர்த்து வந்தாள். அவள் வெளியே செல்லுகிற பொழுதெல்லாம், கீரியைத் தன் குழந்தைக்குக் காவலாக வைத்து விட்டுச் செல்வது வழக்கம். அவ்வாறே, ஒருநாள் தொட்டிலில் குழந்தையைக் கிடத்தி விட்டு, மரகதவல்லி நீராடச் சென்றாள்.

அவ்வேளை ஒரு பாம்பு தொட்டில் அருகில் வந்தது. கீரி அதைக் கடித்துக் கொன்றது. அப்பாம்பின் இரத்தம் கீரியின் உடல் முழுவதும் படிந்து இருந்தது. ஆகவே, அது இரத்தத்தில் புரண்டதுபோல் தோன்றிற்று.

மரகதவல்லி நீராடிவிட்டு வீடு வந்தாள். வீட்டு வாயிலில் கீரி இரத்தக் கறைகளுடன் இருப்பதைக் கண்டாள். தன் குழந்தையைத் தான் அது கடித்துக் கொன்றுவிட்டதெனத் தீர்மானித்தாள்.

உடனே தன் கையிலிருந்த நீர்க் குடத்தை அக்கீரியின்மேல் போட்டு அதைக் கொன்றுள்.

வீட்டினுள் சென்ற மரகதவல்லி தன் குழந்தை அயர்ந்து நித்திரை செய்வதையும், தொட்டிலின் அருகில் பாம்பு துண்டு துண்டாய்க் கடிக்கப்பட்டுக் கிடப்பதையுங் கண்டாள். தன் செய்கைக்கு மிகவும் வருத்தப்பட்டாள். "ஐயோ! என் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய அருமைக் கீரியைக் கொன்றுவிட்டேனே!" என்று சொல்லி அழுதாள்.

"ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு"

**பயிற்சி:**

*நீங்கள் வாசித்த கதையில் உள்ள ஒரு சம்பவம் கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. படத்தைப் பார்த்து அச் சம்பவத்தைச் சொல்லுங்கள்.*



# 13. தக்கிளி அல்லது கைக் கதிர்



நம்முடைய நாட்டில் நெசவுத் தொழில் மிகப் பழங்காலந் தொட்டு நடைபெற்று வருகிறது. பழங்காலத்தில் நெசவுத் தொழில் நடத்திய நம்முடைய முன்னோர்கள் உபயோகித்த கருவிகள் பலப் பல. அவற்றுள் தக்கிளி அல்லது கைக் கதிர் என்பது ஒன்று. கையால் நூல் நூற்க இக் கருவி உபயோகப்படுகிறது.

தக்கிளியை மிக எளிதில் செய்யலாம். ஒரு ஓட்டுத் துண்டையோ அல்லது மாக்கல்லையோ அல்லது பித்தளைத் தகட்டையோ எடுத்து அதை வட்டமாக்கிக் கொள்ளவேண்டும். பின், அதன் நடுவில் ஒரு துவாரம் உண்டாக்கவேண்டும். ஒரு பலமான குச்சியை நேராகச்சீவி அத் துவாரத்தில் பொருத்த வேண்டும். இக் குச்சித்தண்டு ஆறு அல்லது ஏழு அங்குல நீளம் இருக்கவேண்டும்.

உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ அல்லது நடந்துகொண்டோ தக்கிளியில் நூல் நூற்கலாம். ஆனல் நூற்கும் பொழுது நாம் கவனிக்க வேண்டிய குறிப்புகள் சில உள.

நூல் எல்லா இடங்களிலும் சம பருமனுக இருக்க வேண்டும். நூலில் தேவைக்குக் கூடுதல் ஆகவோ குறைவாகவோ முறுக்கு ஏருமல் சம மாக இருக்கும்படி செய்யவேண்டும். நூலை எப் பொழுதும் ஒரே பக்கத்தில் முறுக்குதல் வேண்டும்

தக்கிளி இக்காலத்தில் நம் நாட்டில் அதிக மாக உபயோகிக்கப்படுகிறது. மாணவர், ஆசிரியர், வேலைக்காரர், வக்கீல் முதலியோர் ஓய்வு நேரங்களில் தக்கிளியால் நூல் நூற்று நன்மை அடைகின்றனர்.

**கேள்விகள் :**

1. தக்கிளி செய்வது எவ்வாறு ?
2. தக்கிளியில் நூல் நூற்கும்போது நாம் கவனிக்கவேண்டி யன யாவை?
3. யாரெல்லாம் இக்காலத்தில் தக்கிளியால் நூல் நூற் கிருர்கள்?

**இலக்கணம் :**

1. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

மாணவர், ஆசிரியர், வேலைக்காரர், வக்கீல் முதலியோர் ஓய்வு நேரங்களில் தக்கிளியால் நூல் நூற்று நன்மை அடைகிருர்கள்.

2. இவ்வாக்கியத்திலிருந்து ஓர் ஒருமைப் பெயர்ச் சொல்லை யும் ஒரு பன்மைப் பெயர்ச் சொல்லையும் எடுத்து எழுது.

# 14. பனைமரம்



பனை மரமே, பனைமரமே
என் வளர்ந்தாய் பனைமரமே!

நான் வளர்ந்த காரியத்தை
நாட்டாரே, சொல்லுகிறேன்

படுக்க நல்ல பாய் ஆவேன்
வசிக்க நல்ல வீடாவேன்

வெட்ட நல்ல விறகாவேன்
வீடு கட்ட மரமாவேன்

கட்ட நல்ல கயிறுவேன்
கன்று கட்டத் தும்பாவேன்.

மட்டமுள்ள உறியாவேன்
மாடு கட்டத் தும்பாவேன்

ஓதுகின்ற பிள்ளைகளுக்(கு)
ஓலைத் தடுக்கும் நானாவேன்

பசித்துவரும் பேர்களுக்குப்
பனம் பழம் நானாவேன்

சித்திரைக் கோடையிலே
சிறந்த நல்ல நுங்காவேன்

பலசரக்கு மண்டியிலே
பத்திரமாய் நான் இருப்பேன்

வரிக்கரை மீதினிலே
எந்நாளும் வீற்றிருப்பேன்

— பழம் பாடல்,

14 7012

# 15. கடிதம் எழுதும் முறை — I

தனபாலன் என்பவருக்குத் தினகரன், சுந்தரி என்ற இரண்டு பிள்ளைகள் இருந்தனர். தினகரன் பாளையங்கோட்டை, திரு யோவான் உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவன் தங்கை சுந்தரி, அவர்களுடைய சொந்த ஊரான உச்சங்குளத்தில் மூன்றுவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள்.

சுந்தரி ஒருநாள் தன் அண்ணன் தினகரனுக்குக் கடிதம் எழுத விரும்பினாள். அப்பொழுது



அவளுடைய தந்தை வீட்டில் இல்லை. தன் தந்தையின் அறைக்குள் போய் அங்கு மேசைமேல் இருந்த பேனாவை எடுத்து ஒரு கடிதம் எழுதினாள். அவள் எழுதின கடிதத்தைத் திரும்பப் படித்துக்கொண்டிருக்கையில் அவள் தந்தை வந்துவிட்டார். சுந்தரி தான் எழுதிய கடிதத்தைத் தந்தையிடம் காட்டினாள்.

தனபாலன் கடிதத்தைப் படித்துக்கொண்டே சிரித்தார். சுந்தரியும் சிரித்துக்கொண்டே "ஏன் அப்பா, சிரிக்கிறீர்கள்? நான் தவறாக எழுதியிருக்கிறேனே?" என்று கேட்டாள். "இக்கடிதத்தை

TB
031(3) N56.

எழுதியது யார் என்று உன் அண்ணன் எப்படித் தெரிந்து கொள்ளுவான்?" என்று தனபாலன் தன் மகளைக் கேட்டார். "கடிதத்தின் அடியில் என் பெயரை எழுதி விடுகிறேன்" என்று சுந்தரி பதில் சொன்னாள். "அதுமட்டும் போதாது. எந்த ஊரிலிருந்து, என்ன தேதியில் எழுதியிருக்கிறாய் என்றும் உன் அண்ணன் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகையால் கடிதத்தின் தலைப்பில் வலப்புறம் நம்முடைய ஊர்ப் பெயரை எழுது. அதற்குக் கீழே தேதியைக் குறிப்பிடு. இடது ஓரத்தில், 'பிரியமுள்ள அண்ணன் தினகரனுக்குத் தங்கை சுந்தரி எழுதும் கடிதம்' என்று ஆரம்பித்து, நீ எழுதவேண்டியவற்றை எழுது. கடைசியில், 'இப்படிக்கு, உன் பிரியமுள்ள தங்கை சுந்தரி' என்று எழுதிக் கடிதத்தை முடி" என்று சொல்லித் தன் மகளை அனுப்பிவிட்டார். மகளும் கடிதம் எழுதப் போய்விட்டாள்.

**கேள்விகள் :**

1. *கடிதத்தின் தலைப்பில் என்ன எழுத வேண்டும்?*
2. *நீ உன் தங்கைக்குக் கடிதம் எழுதினால் எவ்வாறு தொடங்குவாய்?*
3. *கடிதத்தை எவ்வாறு முடிப்பாய்?*

# 16. கடிதம் எழுதும் முறை — II

சிறிது நேரத்திற்குள் சுந்தரி கடிதம் எழுதி முடித்துவிட்டாள். "அப்பா, நான் கடிதம் எழுதி முடித்துவிட்டேன். விலாசம் மட்டும் எழுத வேண்டும். நீங்கள் சொல்லுங்கள். நான் எழுதுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அறையிலிருந்து வெளியே வந்தாள். தனபாலன் சந்தோஷத்துடன், "நீயே விலாசம் எழுதுவது நல்லதுதான். முதலில் உன் அண்ணன் பெயரை எழுது. பின், அவன் எந்த வகுப்பில் படிக்கிறானோ அந்த வகுப்பைக் குறிப்பிடு. அதன்பின் அவன் பள்ளிக்கூடத்தின் பெயரை எழுது. கடைசியாக அப்பள்ளிக்கூடம் இருக்கும் ஊர்ப் பெயரை எழுது" என்று சொன்னார்.

தந்தை சொன்னபடியே சுந்தரி கீழ்க்கண்ட விலாசத்தை எழுதினாள்.

த. தினகரன்,
ஐந்தாம் வகுப்பு,
திரு யோவான் உயர்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

பிறகு, தன் வீட்டிற்குச் சற்று தூரத்தில் உள்ள ஒரு வீட்டில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு தபால் பெட்டியில் அக்கடிதத்தைப் போட்டாள்.

அடுத்த நாள் மாலை நான்கு மணிக்குத் தினகரன் கையில் கடிதம் கிடைத்தது. அவன் அக்கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தான். அதில் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தது.

உச்சங்குளம்,
20—10—1955.

பிரியமுள்ள அண்ணன் தினகரனுக்குத் தங்கை சுந்தரி எழுதும் கடிதம்:—

அண்ணா! அடுத்த வாரம் புதன்கிழமை நம் ஊரில் நவராத்திரிப் பண்டிகை கொண்டாடப் போகிறார்கள். தெருக்களில் இப்பொழுதே சில கடைகள் வந்துவிட்டன. எல்லோரும் வீடுகளை வெள்ளையடித்துச் சுத்தம் செய்கிறார்கள். தென் காசியிலிருந்து அத்தை வருவதாக எழுதியிருக் கிறார்கள். அப்பா எனக்கும், உங்களுக்கும் புதுத் துணிகள் வாங்கி வைத்திருக்கிறார்கள். நீங்கள் திருவிழாவுக்குக் கட்டாயம் வரவேண்டும். வரும் பொழுது எனக்கு ஒரு பவளமாலை வாங்கிக் கொண்டு வாருங்கள்.

இப்படிக்கு,
பிரியமுள்ள தங்கை
சுந்தரி.

**கேள்விகள் :**

1. வேறொரு ஊரிலிருக்கும் உன் அண்ணனுக்கு விலாசம் எழுதிக் காட்டு.
2. சுந்தரி தன் தமையனுக்கு என்ன செய்தி எழுதியிருந்தாள்?
3. உன் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுது.

இலக்கணம் :

இந்த வாக்கியங்களைப் படி.

1. சுந்தரி கடிதம் **எழுதினுள்.**

2. தினகரன் அவள் கடிதத்தைப் **படித்தான்.**

3. வீடுகளைச் **சுத்தம் செய்கிருர்கள்.**

எழுதினுள், படித்தான், சுத்தம் செய்கிருர்கள்—இவை எல்லாம் தொழில்களைக் குறிக்கும் சொற்கள்.

எழுதுவது ஒரு தொழில்

படிப்பது ஒரு தொழில்

சுத்தம் செய்வது ஒரு தொழில்

இதேபோல் நடப்பது, ஓடுவது, பாடுவது, ஆடுவது முதலியனவெல்லாம் தொழில்களே. தொழிலுக்கு 'வினை' என்று ஒரு பெயர் உண்டு. ஆகையால் தொழிலைக் குறிக்கும் சொற்களை **வினைச் சொற்கள்** என்று சொல்வார்கள்.

# 17. பத்திரிகைச் செய்தி

(செய்தியை மௌனமாகப் படித்துச் சொல்)

## திருநெல்லூரில் தீ விபத்து—
## சாரணச் சிறுவனின் வீரச் செயல்

விருதுநகர்,
ஜூன் 18

இந்நகரின் சந்தைப் பேட்டைக்கு எதிரில், நேற்று முன்தினம் மாலை 2 மணிக்கு ஒரு கூரை வீட்டில் திடீரென்று தீப்பிடித்தது. இந்தத் தீ பக்கத்திலுள்ள மூன்று வீடுகளுக்கும் பரவி எரிய ஆரம்பித்தது.

பள்ளிக்கூடத்திற்குச் சென்று கொண்டிருந்த சாரணச் சிறுவன், தீ! தீ! என்று சத்தமிட்டான். பள்ளிக்கூடத்திலிருந்த ஆசிரியரும் மாணவர்களும் ஓடிவந்தனர். தீ அணைக்கும் படையினரை அழைத்து வரும்படி ஆசிரியர் ஒரு மாணவனை அனுப்பினார். தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த ஒரு வீட்டினுள்ளே குழந்தை அழுகிற குரல் கேட்டது. தீயை அணைப்பதற்கு உதவி செய்து கொண்டிருந்த ஒரு சாரணச் சிறுவன் வீட்டிற்குள்ளே பாய்ந்து சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். இதற்குள் தீ அணைக்கும் படையினர் வந்து, தீ மேலும் பரவாமல் அணைத்தனர். தீ அணைக்க வந்தவர்கள் எல்லோரும் சாரணச் சிறுவனின் வீரச் செயலைப் பாராட்டிச் சென்றனர்.

(சுமதி நிருபர்)

# 18. கோதுமைத் தோசை.



**சுந்தர் :** அப்பா! எனக்கு அரிசித் தோசைதான் விருப்பம். அம்மா ஏன் கோதுமைத் தோசை செய்கிறார்கள்?

**தந்தை :** சுந்தர்! அம்மா என்ன செய்வார்கள்? வீட்டிலிருக்கும் ஆகாரத்தைத் தானே தருவார்கள். அரிசி வேண்டிய அளவு கிடைக்கவில்லை. அதற்குப் பதில் கோதுமைதான் கிடைக்கிறது.

**சுந்தர் :** ஏன் அப்பா அரிசி கிடைக்கவில்லை? நேற்றுத் தங்கம்மாள் அரிசி வாங்கப் போகும்போது நானுஞ் சென்றேன். அரிசிக் கடையிலே மூட்டை மூட்டையாக அரிசி இருந்ததே.

**தந்தை :** கடையில் அரிசி இருக்கிறது. நம்முடைய பங்கு அரிசியை நாம் வாங்கிவிட்டோம். கடையில் இருக்கும் அரிசி மற்றவர்க ளுடையது. அதை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்கள்.

**சுந்தர் :** ஏன் அப்பா, அரிசிக் கடைக்காரன் அரிசி யைப் பங்கிட்டுத் தருகிருன்?

**தந்தை :** நம்முடைய நாட்டில் நம் எல்லோருக்கும் போதுமான அரிசி இல்லே. ஆதலால், கிடைக்கும் நெல் அல்லது அரிசியைச் சர்க்கார் விலே கொடுத்து வாங்கி, ஒரு ஆளுக்கு இவ்வளவு நெல் அல்லது அரிசி என்று ஒரு அளவும் ஏற்படுத்திக் கடைக் காரனிடம் கொடுத்து விடுகிருர்கள். கடைக்காரன் சர்க்கார் ஏற்படுத்திய அளவுப்படி எல்லோருக்கும் **பகிர்ந்து கொடுக்கிருன்.** இதற்குப் 'பங்கீட்டு முறை' என்பது பெயர். குறைந்த அளவு அரிசியே நமக்குக் கிடைப்பதால் கோது மையையும் சேர்த்துத் தருகிருர்கள்.

**சுந்தர் :** அப்பா! இந்த அரிசிக்குறை எப்பொழுது தீரும்? நாம் எப்பொழுது நிரம்ப அரிசிச் சோறும் அரிசித் தோசையும் சாப்பிடலாம்?

**தந்தை :** நம்முடைய நாட்டிலுள்ள தரிசு நிலங்களே யெல்லாம் பயிரிடவேண்டும். நிலங்களே ஆழமாக உழுது பயிர் செய்ய வேண்டும்.

நிலத்திற்கு நல்ல உரம் போட வேண்டும். அப்பொழுதுதான், இப்பொழுது கிடைப்பதைவிட அதிக உணவுப் பொருள்கள் நமக்குக் கிடைக்கும்.

**கேள்விகள் :**

1. தினகரனுக்குத் தாயார் ஏன் கோதுமைத் தோசை கொடுத்தார்கள் ?

2. 'பங்கீட்டு முறை' என்றால் யாது ?

3. அதிக உணவுப் பொருள் கிடைப்பதற்கு நாம் செய்ய வேண்டியவை யாவை?

**இலக்கணம் :**

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களை எடுத்து எழுது :—

1. அம்மா கோதுமைத் தோசை தருகிறார்கள்.

2. மூட்டை மூட்டையாக அரிசி இருக்கிறது.

3. அரிசியைப் பங்கிட்டுக் கொடுப்பான்.

4. நிலங்களை ஆழமாக உழுது, பயிர் செய்யவேண்டும்.

# 19. ஆகாய விமானம்



வானமீ தெழுவேன் — அங்கே
வட்டம் சுற்றிடுவேன்

கானம் மலையெல்லாம் — யானோர்
கணத்தில் தாண்டிடுவேன்

இடைவி டாது தபால் — உலகில்
எங்கும் கொண்டு செல்வேன்

சடைவி லாமலே — பலரைத்
தாங்கியும் போவேன்

நன்மை செய்ய வந்தேன் — அதை
நன்குண ராமல்

வன்மைப் போரில் எனை இழுத்து
மாட்டி விட்டாரையோ!

சாந்த மூர்த்தியின் — அஹிம்சா
தருமம் மேற்கொண்டு

மாந்தர் இவ்வுலகில் — நன்றாய்
வாழ்வ தெந்நாளோ.

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

# 20. விளையாட்டு

குறிப்பு : ஒவ்வொரு வரிசையிலும் மூன்று அல்லது நான்கு வார்த்தைகள் இருக்கின்றன. அவைகளை முதல் வரிசைக்கு நேரே எழுதிக் காட்டியிருப்பது போல் மற்ற வரிசைகளுக்கு நேரே எழுதவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | ழு | ரை | கு | தை | தி | கழுதை<br>கழுகு<br>குதிரை |
| 2 | பு | எ | ல் | லி | ணி | அ | |
| 3 | பூ | யா | டு | னை | மா | ஆ | |
| 4 | ம | கு | ல் | யி | டை | கா | |
| 5 | று | ரு | எ | மை | ரி | ந | |
| 6 | ரை | ய் | நா | றி | ன் | ப | |

# 21. நரியும் ஒட்டகமும்



ஒரு காட்டில் ஒரு நரியும் ஓர் ஒட்டகமும் சேர்ந்து வசித்து வந்தன. ஒருநாள் நரிக்கு மிகவும் பசியாய் இருந்தது. அக் காட்டில் ஓர் ஆறு இருந்தது. ஆற்றின் அக்கரையில் ஏராளமான நண்டுகள் இருந்தன. நரி அக்கரை சென்று நண்டுகளைப் பிடித்துத் தின்ன ஆசை கொண்டது. ஆனல் ஆற்றில் தண்ணீர் அதிகமாய் இருந்த படியால் நரியால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. ஆற்றைக் கடந்து அக்கரை செல்ல நரி ஓர் உபாயம் செய்தது. அது தனது நண்பனுகிய ஒட்டகத்தினிடம் சென்று, "நண்பா! ஆற்றின் அக்கரையில் ஏராளமான கரும்புத் தோட்டங்கள் இருக்கின்றன. என்னை உன் முதுகின்மேல் ஏற்றி அக்கரை சென்ருல் நான் அக் கரும்புத் தோட்டங்களை உனக்குக் காட்டுவேன்" என்று கூறிற்று.

ஒட்டகத்திற்குக் கரும்பின்மேல் பிரியம் அதிகம். அதனல் அது நரியின் யோசனையை ஏற்றுக் கொண்டது. நரியைத் தன் முதுகின் மேல் ஏற்றிக்கொண்டு ஆற்றைக் கடந்தது. அக்கரை சேர்ந்ததும், நரி ஒட்டகத்தைக் கரும்புத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றது. ஒட்டகம் கரும்புகளை ஆவலுடன் தின்ன ஆரம்பித்தது.

நரி ஆற்றின் கரையில் உள்ள நண்டுகளைத் தின்றது. அதன் வயிறு நிரம்பியதும் தனது இருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்ல விரும்பிற்று. ஆனல் ஒட்டகத்திற்கு இன்னும் அரை வயிறு கூட நிரம்ப வில்லை. நரி ஒட்டகத்தை அழைத்த வுடன் ஒட்டகம் வயிறு நிரம்பிய பின்தான் வர முடியும் என்று சொல்லிவிட்டது.

நரி மறுபடியும் ஓர் உபாயம் செய்தது. திடீ ரென்று அது ஊளையிட்டது. அந்தச் சத்தத் தைக் கேட்ட தோட்டக்காரன் தடியை எடுத்துக் கொண்டு ஓடி வந்தான். நரி அருகில் இருந்த புதரில் மறைந்து கொண்டது. கரும்பைத் தின்று கொண்டிருந்த ஒட்டகத்தைத் தோட்டக்காரன் தடியால் அடித்து விரட்டினன்.

ஒட்டகம் ஆற்றை நோக்கி ஓடியது. நரி ஒட்டகத்தினிடம் ஓடிவந்து, அதன் முதுகில் ஏறிக்கொண்டது. ஒட்டகம் நரியைப் பார்த்து, "நீ ஏன் ஊளை இட்டாய்? அதனல் அல்லவா தோட்டக்காரன் என்னை இப்படி அடித்து விட்டான்" என்று கேட்டது.

நரி, "நான் நன்ருய் உண்டபின் ஊளையிடுவது வழக்கம்" என்றது. அப்பொழுது ஒட்டகம் நடு ஆற்றில் வந்து கொண்டிருந்தது. அது நரியைப் பார்த்து, "ஐயா நரியாரே! நான் இப்பொழுது தண்ணீரில் புரளப் போகிறேன்" என்று கூறிற்று.

நரி, "ஐயோ, நீ தண்ணீரில் புரண்டால் நான் நீரில் மூழ்கி இறந்துவிடுவேன். தயவு செய்து புரள வேண்டாம்" என்று கெஞ்சி கேட்டது.

அதற்கு ஒட்டகம், "ஐயா நரியாரே! நன்ருய் உண்டபின் ஊளையிடுவது உம்முடைய வழக்கம். அல்லவா? அதுபோல நன்ருய் உண்டபின் தண்ணீரில் புரளுவது என் வழக்கம்" என்று கூறித் தண்ணீரில் புரண்டது. நரி நீரில் மூழ்கி இறந்தது.

**கேள்விகள்:**

1. நரி ஏன் ஆற்றின் அக்கரை செல்ல விரும்பிற்று?
2. ஆற்றின் அக்கரை செல்ல நரி செய்த உபாயம் யாது?
3. நரி ஏன் ஊளையிட்டது?
4. அதன் பயன் என்ன?
5. ஒட்டகம் நரியை எப்படித் தண்டித்தது?

# 22. ஔரங்கசீபு

சில நூற்றுண்டுகளுக்கு முன் டில்லியில் முகலாய அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களில் ஔரங்கசீபும் ஒருவர். அவர் மகமதிய மதத்தினர்; கடவுள் பக்தி மிக்கவர். எல்லோரும் அவரைப் போலவே கடவுள் பக்தியுடன் வாழ வேண்டுமென்று அவர் விரும்பினர்.

அவர் அரசராக இருந்த போதிலும் ஆடம்பரமான வாழ்க்கையை விரும்பவில்லை. எளிய ஆடைகளை அணிந்து, எளிய உணவுகளையே உண்டு வந்தார். அரண்மனைப் பொக்கிஷத்திலிருந்து பணத்தை எடுத்துத் தன் சொந்தச் செலவு செய்ய அவர் விரும்ப வில்லை. தன் கையாலேயே மகமதியரது வேதமாகிய குர் ஆனை எழுதி, விற்று அதனால் வரும் பணத்தையே செலவு செய்தார். அவர் மரணப் படுக்கையில் இருந்த பொழுது அவர் இவ்வாறு சம்பாதித்த பணத்தில் எட்டு ரூபாய் மட்டும் மீதி இருந்தது.

ஔரங்கசீபுக்குத் தன்னுடைய முடிவு காலம் சமீபித்துவிட்டது என்று தெரிந்தது. ஆகையால் அவர் தம்முடைய மந்திரியை அழைத்தார். மந்திரியும் அவர் படுக்கை அருகில் வந்தார். அவர்கள் இருவருக்கும் கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்தது.

**ஔரங்கசீபு:** மந்திரி! என் இறுதிச் சடங்குக்கு எத்தனை ஆயிரம் ரூபாய் செலவிடப் போகிறீர்கள்?

மந்திரி: பாதுஷா அவர்களே! ஆயிரக் கணக்கில் அல்ல, லக்ஷக்கணக்கில் செலவழிக்கத் திட்டம் இட்டிருக் கிறோம்.

ஔரங்கசீபு: ஏன்? லக்ஷக் கணக்கில் தானா?

மந்திரி: தங்களுக்குச் சித்தமானால் எத்தனை கோடி வேண்டுமென்றாலும் செலவு செய்கிறோம்.

ஔரங்கசீபு: (சிரித்துக்கொண்டு) மந்திரி! குடிகள் கொடுத்த அவர்களுடைய பணத்தை என் பிணத்துக்காகச் செலவிட என்ன நியாயம் இருக்கிறது? என் ஆயுள் நாள் முழுவதும் எனக்குத் தேவையாயிருந்த என் உணவுக்காக வும், உடைக்காகவும் நானே உழைத் துச் சம்பாதித்தேன். நான் இறந்த பிறகும், பிறருடைய பணத்தில் ஒரு காசு கூட எனக்காகச் செலவிடுதல் கூடாது. என்னிடம் எட்டு ரூபாய் இருக்கிறது. அந்தப் பணத்துக்குள் என்னை அடக்கஞ் செய்யுங்கள்.

அரசருடைய உயர்ந்த எண்ணத்தை மந்திரி உணர்ந்தார். "பாதுஷா அவர்களே! மன்னிக்க வேண்டும்" என்று பணிவுடன் கூறினார். அவர் கூறிய சொற்கள் ஔரங்கசீபின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கும்பொழுதே அவருடைய உயிர் பிரிந்து சென்றது.

**கேள்விகள் :**

1. ஔரங்கசீபு யார்?
2. 'குர் ஆன்' என்பது யாது?
3. ஔரங்கசீபு தன் சொந்தச் செலவுக்கு வேண்டிய பணத்தை எவ்வாறு சம்பாதித்தார்?
4. ஔரங்கசீபு சாகுந் தருணத்தில் அவர் கையில் எவ்வளவு பணம் இருந்தது?
5. மந்திரி எவ்வளவு பணம் செலவு செய்ய விரும்பினர்?

**இலக்கணம் :**

கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்ச் சொற்களுடன் பொருத்தமான வினைச் சொற்களைச் சேர்த்து எழுது :—

| பெயர்ச் சொற்கள் | வினைச் சொற்கள் |
|---|---|
| அரசர்கள் | அழைத்தார் |
| ஔரங்கசீபு | நடந்தது |
| சம்பாஷணை | ஆண்டு வந்தார்கள் |
| எட்டு ரூபாய் | சமீபித்துவிட்டது |
| முடிவு காலம் | இருக்கிறது |

# 23. காந்தி அடிகள்

நம்முடைய இந்தியா தேசத்தில் மகான்கள் பலர் தோன்றி, மக்களுக்குப் பல நன்மைகள் செய்துள்ளார்கள். அவர்களில் தலை சிறந்து விளங்குபவர் காந்தி அடிகள். இவர் 1869-ம் ஆண்டு,



பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த போர்பந்தர் என்னும் ஊரிற் பிறந்தார்.

இளமையிலேயே காந்தியடிகளிடம் சிறந்த குணங்கள் அமைந்திருந்தன. இவர் எப்பொழுதும் உண்மையையே பேசினர். புத்தகங்களைப் படிப்பதில் இவருக்கு அளவு கடந்த ஆசை. ஆகையால் இவருக்குப் பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியர்கள் இவரிடத்தில்

மிகவும் அன்பாய் இருந்தார்கள். இவருடைய பதினெட்டாம் வயதில் சட்டக் கல்வி கற்பதற்காக இங்கிலாந்து சென்றார். சட்டக் கல்வி கற்றுத் தேறியபின் தமது தாய் நாட்டிற்கு வந்தார்.

முதலில் இவர் பம்பாயில் வக்கீல் தொழில் நடத்தினார். பின்னர், தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று அத்தொழிலைத் திறம்பட நடத்தினார். அங்குக் குடியேறி இருந்த இந்தியர்களை ஆங்கிலேயர்கள் கொடுமையாய் நடத்தினார்கள். இது நம் காந்தி அடிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் ஆப்பிரிக்காவில் குடியேறி இருந்த நம் ஜனங்களுக்காக இவர் ஆங்கிலேயரை எதிர்த்து வாதாடினார்.

பின்னர் நம் நாட்டிற்கு வந்தார். இங்கும் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி நடத்தி நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தந்தார்.

காந்தி அடிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த சிறந்த நிகழ்ச்சிகள் பல உண்டு. அவைகள் இவருடைய அரிய குணத்தை வெளியிடுகின்றன.

இவர் தென் ஆப்பிரிக்காவில் வக்கீலாக இருந்த சமயத்தில் அங்குள்ள ஒருவன் காந்தி அடிகளிடம் வந்து தனக்காக நீதி ஸ்தலத்தில் வழக்காடுமாறு வேண்டிக்கொண்டான். காந்தி அடிகள் அவன் மீது இரக்கங்கொண்டு, வழக்கு என்னவென்று வினவினார். "களவுக் குற்றச் சாட்டு" என்று அவன் பதில் உரைத்தான்.

காந்தி அடிகள் அவனைப்பார்த்து, "நீ களவு செய்தாயா?" என்று கேட்டார். இக் கேள்வி அவனுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. குற்றஞ் செய்தவனைக் குற்றம் செய்யாதவன் என்று சொல்லி வழக்காடித் தப்புவிப்பதே வக்கீல்களின் வேலை என்று அவன் எண்ணி இருந்தான். ஆகையால் அவன், "நான் களவு செய்தது உண்மைதான்; ஆனால் நீதி ஸ்தலத்தில் அப்படிச் சொல்ல முடியுமா?" என்று தயக்கத்துடன் கூறினான். "அப்படியானால், நீ களவு செய்தது உண்மைதான் என்று நீதிபதியிடம் சொல்லிச் சட்டப்படி உனக்குத் தண்டனை வாங்கித் தருகிறேன்" என்றார் காந்தி அடிகள்.

**கேள்விகள் :**

1. காந்தி அடிகள் எங்கே, எப்பொழுது பிறந்தார்?

2. காந்தி அடிகள் ஆப்பிரிக்காவில் என்ன தொழில் செய்தார்?

# 24. காந்தி மகான் வாழ்த்து

1. தேசத்தி லேபெரிய தாத்தா—நாங்கள்
   தெய்வம் எனக் கொண்டாடும் தாத்தா
   நேசத்தி லேபெரிய தாத்தா—கொண்ட
   நினைப்பைச் செய்து முடிக்குந் தாத்தா

2. ஏழைக் கிரங்குகின்ற தாத்தா—எங்கள்
   ஏக்கத்தை நீக்குகின்ற தாத்தா!
   கோழைத் தனம்விடுத்து நாங்கள்—சிம்மக்
   கூட்டம் போல் எழச்செய்த தாத்தா

3. பஞ்சடித்(து) இராட்டினத்தில் நூற்றே—
   [தொழில்
   பாடம் புகட்டுகின்ற தாத்தா!
   துஞ்சா முயற்சியுள்ள தாத்தா—ஒரு
   சொல்லால் உலகை வெல்லும் தாத்தா!

—சுவாமி சுத்தானந்த பாரதி.

# 25. வள்ளல் பாரி

(மௌனமாகப் படித்துக் கதையைச் சொல்)

முன்னொரு காலத்தில் பாரி என்று ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கும் வள்ளலாக இருந்தான். புலவர்கள் அவனைப் பாடி அவனிடம் பரிசில் பெறுவது வழக்கம்.

அவன் கொடைச் சிறப்பை விளக்கும் ஒரு வரலாறு உண்டு. ஒரு நாள் பாரி தன் மலை நாட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றான். அவன் செல்லும் வழியில் ஒரு முல்லைக் கொடியைக் கண்டான். அது படர்வதற்குக் கொழுகொம்பு இன்றிக் காற்றில் ஆடிக்கொண்டிருந்தது.

அக் கொடியைக் கண்டு, பாரி மனம் இரங்கினான். உடனே தான் ஏறி வந்த தேரை அக் கொடி பற்றிக்கொண்டு படர்வதற்குக் கொழுகொம்பாக விட்டுவிட்டுக் கால் நடையாகத் தன் அரண்மனையை அடைந்தான்.

**பயிற்சி :**

**கீழ்வரும் வாக்கியங்களைப் படியுங்கள்.**

1. பாரி என்று ஒரு சிற்றரசன் இருந்தான்.
2. புலவர்கள் அவனைப் பாடி அவனிடம் பரிசில் பெறுவது வழக்கம்.
3. பாரி ஒரு முல்லைக் கொடியைக் கண்டான்.

இவ்வாக்கியங்கள் முடிந்த அர்த்தத்தைக்கொண்டன. ஆதலால் இவ்வாக்கியங்களின் இறுதியில் ( . ) முற்றுப்புள்ளியிடுகிறோம். வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளி இடாதிருத்தல் தவறு.

## இவ் வாக்கியங்களைப் படியுங்கள் :

1 புலவர்களுக்குப் பாரி பரிசில் அளித்தானா?

2. பாரி ஒரு நாள் எங்கே சென்றான்?

3. பாரி நடந்து சென்றானா?

இந்த வாக்கியங்களும் முடிந்த அர்த்தத்தை யுடையனவே. ஆகையால் இவைகளும் வாக்கியங்களே. ஆனால் இந்த வாக்கியங்கள் கேள்வியைத் தெரிவிக்கின்றன. கேள்வி என்றாலும் வினா என்றாலும் ஒன்றே. கேள்வி வாக்கியங்களின் இறுதியில் வினாக் குறி ( ? ) இடுகிறோம்.

# 26. இரண்டு நண்பர்கள்

(நாடகம்)

காட்சி 1.

இடம் : மரம், செடி அடர்ந்த காடு.

பாத்திரங்கள் : கருணாகரன், சுந்தரம்.

நேரம் : மாலை.

**கருணாகரன் :** இந்தக் காட்டின் வழியாகத்தான் போக வேண்டுமோ? இந்த வழியாய் நாம் எப்பொழுதும் போனதில்லையே!



**சுந்தரம் :** இந்த வழியாய்ச் சென்றால் சீக்கிரம் ஊர் போய்ச் சேர்ந்து விடலாம். ஆகையால்தான் இந்த வழியாய் உன்னை அழைத்துச் செல்கிறேன்.

**கருணாகரன்:** எனக்குப் பயமாக இருக்கிறதே. காட்டிலே கரடி வசிக்கும் என்று படித்திருக்கிறோம். கரடி வந்தால் அது நம்மைக் கொன்றுவிடுமே!

**சுந்தரம்:** கரடிக்குப் பயப்படுகிறாயா? கரடி வந்தால் நான் ஒரே அடியில் அதை அடித்துக் கொன்றுவிடுவேன். பயப்படாமல் வா.

**கருணாகரன்:** சுந்தரம்! எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது.

(இருவரும் செல்கின்றனர்)

காட்சி **2.**

**இடம்:** நடுக்காடு.

**பாத்திரங்கள்:** கருணாகரன், சுந்தரம், கரடி.

**நேரம்:** மாலை.

**சுந்தரம்:** கருணாகரா! நீ சொன்னபடியே கரடி வந்துவிட்டதே! என்ன செய்யலாம்?

**கருணாகரன்:** ஐயோ! சுந்தரம்! நீதான் அதை அடித்துக் கொல்ல வேண்டும். இதோ கம்பு. இதைக் கொண்டு அதை அடித்துக் கொல்.

**சுந்தரம்:** அடிக்கவா? கரடியை நாம் எப்படி அடித்துக் கொல்ல முடியும்?

**கருணாகரன்:** நீ "கரடியை அடித்துக் கொன்றுவிடுவேன்" என்று சொன்னாயே!

**சுந்தரம்:** கரடி நமக் கெதிரேதான் வருகிறது. நான் அந்த மரத்தில் ஏறிக்கொள்ளப் போகிறேன். நீயும் ஒரு மரத்தில் ஏறிக் கொள்.



(சுந்தரம் மரத்தில் ஏறிக்கொள்கிறான்)

**கருணாகரன்:** (தனக்குள்ளே) நான் செத்தவன் போல் படுத்துக் கொள்கிறேன் வேறு வழியில்லை. செத்தவனைக் கரடி ஒன்றும் செய்யாது என்று கேள்விப்பட்டிருக் கிறேன்.

[படுத்துக் கொள்கிறான். கரடி வந்து முகர்ந்து பார்த்து விட்டுச் செத்தவன் என்று நினைத்து ஒன்றும் செய்யாமல் போய் விடுகிறது.]

## காட்சி 3.

**இடம் :** நடுக்காடு.

**பாத்திரங்கள் :** கருணாகரன், சுந்தரம்.

**நேரம் :** மாலை.

**சுந்தரம் :** (மரத்திலிருந்து கீழே இறங்கி வந்து) கருணாகரா! நீ நல்ல யோசனை செய்தாய்.

**கருணாகரன் :** ஆம், மிகவும் நல்ல யோசனை.

**சுந்தரம் :** கருணாகரா! அந்தக் கரடி உன் முகத்தி னருகே தன் வாயை வைத்துக்கொண்டு வெகு நேரம் நின்றதே. அது என்ன செய்தது ?

**கருணாகரன் :** அது என்னோடு பேசிற்று.

**சுந்தரம் :** பேசிற்று? கரடி உன்னோடு பேசிற்று? அது என்ன சொல்லிற்று கருணாகரா ?

**கருணாகரன் :** 'ஆபத்துக் காலத்தில் உதவாத நண்பனுடன் பழகாதே' என்று திரும்பத் திரும்பச் சொல்லிற்று.

(சுந்தரம் வெட்கித் தலைகுனிகிறான். இருவரும் செல்கின்றனர்.)

# 27. முனிவரும் மானும்

(மௌனமாகப் படித்துக் கதையை முடித்து எழுது)

ஒரு காலத்தில் முனிவர் ஒருவர் ஒரு காட்டில் வசித்து வந்தார். அவருடன் வேறு மனிதர் ஒருவரும் வசிக்க வில்லை. ஆகையால் அவர் ஒரு மான்குட்டியை அன்பாக வளர்த்து வந்தார். அது பெரிய மானுக வளர்ந்தது. அது உல்லாசமாய் அந்தக் காடெங்கும் அலைந்து திரிந்தது. ஆனால் காட்டு மிருகங்களைக் கண்டு மிகவும் பயந்தது முனிவர் அதன்மேல் இரக்கங் கொண்டு, அதை ஒரு புலியாக மாற்றினுர். பின்னர் அது தைரியமாகக் காடெங்கும் திரிந்தது.

இவ்வாறு சில நாட்கள் சென்றன. ஒரு நாள் அப்புலி முனிவரையே கொல்லப் புறப்பட்டது. முனிவர் அதன்மீது கோபங்கொண்டு........

# 28. அற நெறிகள்

1 பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள்.

2 ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதனையைக் கேட்கிறான்.

3 உள்ளதை உள்ளது என்றும், இல்லாததை இல்லாதது என்றும் சொல்லுங்கள்.

4 ஒருவனுக்கு வேலைசெய்ய மனம் இல்லாமல் இருந்தால் அவன் சாப்பிடவுங் கூடாது.

5 சாப்பாட்டுப் பிரியன் தரித்திரன் ஆவான்.

6 களவு செய்யாதீர்கள்; பொய் சொல்லாதீர்கள்.

# செய்யுட் பகுதி

## I. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்(கு) அழிவு

கிட்டா தாயின் வெட்டென மற
கீழோர் ஆயினும் தாழ உரை
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
சான்றோர் என்கை ஈன்றோட்(கு) அழகு
சூதும் வாதும் வேதனை செய்யும்

தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
திரைகட லோடியும் திரவியம் தேடு
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
நுண்ணிய கருமம் எண்ணித் துணி
நூல்முறை தெரிந்து சீலத்(து) ஒழுகு

மாரி அல்லது காரியம் இல்லை
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
வீரன் கேண்மை கூர் அம்பாகும்

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்

தீராக் கோபம் போராய் முடியும்
தோழ னோடும் ஏழமை பேசேல்
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்

—ஒளவையார்

## II. வெற்றி வேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
4. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
5. உண்டிக் கழகு விருந்தோ(டு) உண்டல்.
6. பெண்டிர்க் கழ(கு) எதிர் பேசா திருத்தல்.
7. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
8. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
9. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்(கு) இருக்க நிழலா காதே.
10. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்,
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர், புரவி, ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
11. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
12. நாறுண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாதே.
13. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

14. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.

15. எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பர்.

147012

—அதிவீரராம பாண்டியர்

## III. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே;—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

2. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு

— சி. சுப்பிரமணிய பாரதி.

18774/29

# INBA VACHAGAM

## READER III

*Publishers:*

The Tirunelveli Diocesan Book De

PALAMCOTTAH

PRICE ANNAS SEVEN